R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Publication On 10th of Every Month Licensed to Post Without Pre-Payment
below the Registration No. TN/WPP-169/SR/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Every Month 2017
August 2017

நீங்கள்
உலகமெங்கும்
போய்,
சர்வ
சிருஷ்டிக்கும்
சுவிசேஷத்தைப்
பிரசங்கியுங்கள்
மாற்கு 16:15



பிள்ளைகள்
நம் நாட்டின்
கண்கள்

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக்
கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம் – எபேசியர் 6:1

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M
&
Our TV Program: Nambikkai TV Every Monday & Saturday 7.30 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan




தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 17 | ஆகஸ்ட் 2017 | கனி 9

## Proving what is acceptable unto the Lord - Ephesians 5:10







கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று
நீங்கள் சோதித்துப்பாருங்கள் – எபேசியர் 5:10

Mahathma Gandhiji (1869 - 1948)

THE WORD OF CHRIST

TRUE & PURE

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# World Evangelism
## Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 31 meter band of Sri Lanka Radio. *(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 31 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியங்கள்



டெல்லி சகோ.சன்னிடேவிட்டோடு நம் சகோதர சகோதரி



தூத்துக்குடி மாவட்டம்



மதுரை மாவட்டம்

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 204

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. இஸ்ரவேலர் தாவீது வம்சத்தை விட்டுப் பிரிந்து நேபாத்தின் குமாரனாகிய எவனை ராஜாவாக்கினார்கள்?
2. தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான் மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் எது நிலைத்திராது?
3. உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம் என்ற ராஜா யார்?
4. உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன் என்று எந்த சபைக்கு எழுதும்போது சொல்லுகிறார்?
5. உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவள் எருசலேமில் எங்கே குடியிருந்தாள்?
6. எவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்றார் இயேசு?
7. எஸ்றா எவனுடைய அறைக்குள் பிரவேசிக்கும்போது அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் துக்கித்துக் கொண்டிருந்தான்?
8. பெத்தானியாவில் எந்த குஷ்டரோகி வீட்டில் இயேசு பந்தியிருந்தார்?
9. இஸ்ரவேலருக்கு அறிவை உணர்த்த அவருடைய நல் ஆவியைக் கட்டளையிட்டாரா?
10. அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு நான்தான் கிறிஸ்து என்றும், காலம் சமீபித்தது என்றும் சொல்லுவார்கள் அவர்களை என்ன செய்யாதிருங்கள் என்று நம் ஆண்டவர் சொல்லியிருக்கிறார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**
*ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி.*
*ஆசிரியர்*

## இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

22

நாள்: 25.08.2017 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: K. குருசாமி, இவ்விதழின் வாசகர்
உடையார் பாளையம் - 621 804
அரியலூர் மாவட்டம்

தொடர்புக்கு: 9345229486



## விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தியவர்கள்

சிறுவர் பகுதி

*வேதபகுதி: 1தீமோத்தேயு 1:19-20*



சிறுவர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

முதல் நூற்றாண்டிலே விசுவாசமாகிய கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்தியதாக பவுல் விசுவாசத்தில் உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அப்படி எந்த விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்தினார்கள் என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். **சபையை** விசுவாசமான கப்பல் என்று பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசிக்கிறவர்கள் இந்த கப்பலாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பார்கள். நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினார் அதுவும் விசுவாசபேழைதான் ஏனென்றால் மழை இல்லாத காலத்தில் பேழையை கட்டினார். உலகம் ஜலத்தினால் அழியப்போகிறது என்று சொல்லியும் ஜனங்கள் நம்பவில்லை. தேவன் மழையை 40 நாள் வருஷிக்கப் பண்ணியபோது ஐயோ! ஐயோ! என்று சொல்லி கூக்குரலிட்டிருக்கக்கூடும். ஆனால் நோவாவும் அவனுடைய குடும்பத்தார் மட்டும் காக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு இந்த விசுவாசமான பேழையை அதாவது கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் சபையில் பிரிவினையை ஏற்படுத்துவது. கப்பலை சேதப்படுத்துவதற்குச் சமம். அப்படி சேதப்படுத்தினால் என்னவாகும்? கப்பல் தண்ணீரில் மூழ்கிவிடும் இல்லையா! அதைப்போல சபையை பாழடிக்க எண்ணம் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என்கிறார். பவுல், அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தார். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாமும் அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுப்போம். சில சமயங்களில் நாம சொன்னபடி கேட்காவிட்டால் அப்பா அம்மா இப்படி சொல்லுவாங்க, அந்த கரடிகிட்ட இவனை புடிச்சுகொடுத்திடுவோம் என்று இல்லையா? ஆமாம் நாம விசுவாசத்தின் கப்பலை சேதப்படுத்தாது, அது விசுவாசத்தில் முன்னோக்கி செல்வதற்கு நாம உதவியாயிருக்கணும். இருப்பீங்களா!

**மனப்பாட வசனம்:**

**"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" -1பேதுரு5:8**



திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 17 ஆகஸ்ட் -2017 கனி - 9

ஆசிரியருரை

## சத்தியமும் பணமும்
### Truth & Money



சத்தியம் சத்தியம் என்று எங்குபார்த்தாலும் பேசப்படுகிறது. எது சத்தியம்? சத்தியபரர் யார்? சத்தியம் எவர் மூலமாய் உண்டாயிற்று? சத்தியத்தின் பயன் என்ன? இந்த சத்தியத்தின் தீர்ப்பு எப்படியிருக்கும்? சத்தியம் எங்கும் பேசப்பட்டு வருகிறது. இந்த சத்தியத்தைக்குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் நமக்கு வெளிப்படுத்துகிறார். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்கிறார் (யோவா.17:17). ஆண்டவருடைய வசனம் சத்தியமாக இருக்கிறது. அது ஒரு மனிதனை பரிசுத்தமாக்குகிறதாயிருக்கிறது. இந்த சத்திய வசனங்களை அறியாத ஒருவர் பரிசுத்தமாக முடியாது. வசனங்கள் சத்தியமாயும் ஜீவனாயும் இருக்கிறது. அதை நமக்குக் கொடுத்த ஆண்டவர் சத்தியபரராயிருக்கிறார். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் இயேசு (யோவா.14:6). அவரே வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவுமிருக்கிறார். இன்றைக்கு சத்தியத்தை அறியாத ஜனங்கள் மோசம்போய்க்கொண்டு இருக்கிறார்கள். வீணானவைகளை நாடி ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது. அதை ஒரு மனிதன் விசுவாசிக்கும்போது அது அவனுக்கு ஜீவனையும் விடுதலையையும் கொடுக்கிறது. "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா.1:14). சத்தியம் நமக்குள்ளே வாசமாயிருக்கிறது. இயேசுவானவர் மாம்சத்திலே இப்பூமியில் காணப்பட்டார். அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் முதல் நூற்றாண்டு மக்கள் மத்தியில் ஜீவித்தார். அவருடைய மகிமையை அப்போஸ்தலர்களும் அநேக விசுவாசிகளும் புறஜாதிகளும் கண்டனர். அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது என்று சொல்கிறார் யோவான் அப்போஸ்தலன். ஆம், அன்பானவர்களே, அவர் இன்றும் சத்திய சொரூபியாகவே நமக்குள் வாசம் பண்ணுகிறார். அவருடைய வசனங்கள் சத்தியமாக இருக்கிறது. "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க்

கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17). இந்த சத்தியத்தை பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாகும்படிசெய்தார். நியாயப்பிரமாணத்தை மோசே மூலமாக ஜனங்கள் பெற்றார்கள். ஆனால் கிருபையையும் சத்தியத்தையும் நாம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே பெற்றுக்கொள்கிறோம். இந்த சத்தியத்திற்கு உங்களுடைய செவியை சாய்த்து செவிகொடுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். சத்தியத்தை குறித்து கேள்விப்பட்ட பிலாத்து அப்படியானால் நீ ராஜாவோ என்று இயேசுவைப்பார்த்துக் கேட்டான்; அதற்கு ஆண்டவர்; "நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்" (யோவா.18:37). ஆம், பிரியமானவர்களே, இயேசுவானவர் சத்தியத்தை வெளிப்படுத்தவும் அதைக்குறித்து சாட்சிகொடுக்கவும் பிதாவினால் அனுப்பப்பட்டார். அதற்காகவே இந்த உலகத்தில் பிறந்தார். சத்தியத்தை நேசிக்கிற, அதைப்பின்பற்றுகிற ஒவ்வொருவரும் இந்த சத்தியத்தியத்திற்கு செவிகொடுப்பார்கள்.

இந்த சத்தியத்தின் பயன் என்ன? இயேசுவானவர் தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:32). இந்த சத்தியத்தை ஒரு மனிதன் விசுவாசித்து அதை ஏற்றுக்கொள்ளும்போது தன்னுடைய வாழ்க்கையில் விடுதலையைப் பெற்றுக்கொள்கிறான். வேறுவகையில் இந்த உலகத்தில் அவனுக்கு விடுதலையில்லை. சத்தியம் மட்டுமே அவனை அவனுடைய பாவவாழ்க்கை யிலிருந்து விடுக்கக்கூடியதாக இருக்கிறது. வெறுமனே சத்தியத்தை விசுவாசித்து விட்டு நின்றுவிடுவானேயானால் அவனுக்கு விடுதலை கிடைக்காது. அதற்கு கீழ்ப்படியவேண்டியவனாயிருக்கிறான். சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். யூதர்கள் சத்தியத்தை கேள்விப்பட்டதோடும், விசுவாசத்தோடும் நின்றுவிட்டனர். அதற்கு அநேகர் கீழ்ப்படியவில்லை. ஆகையால் சத்தியத்தை அறிந்து அதற்கு கீழ்ப்படியும்போது, அது நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கும். இது குறித்து எரேமியா குறிப்பிடும்போது; "நியாயஞ்செய்கிற மனுஷனைக் கண்டுபிடிப்பீர்களோ என்றும்; சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும் எருசலேமின் தெருக்களிலே திரிந்துபார்த்து விசாரித்து, அதின் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன்" என்று கர்த்தர் சொன்னார் (எரே.5:1). அப்படியானால் சத்தியத்தை தேடுகிற ஜனங்கள் அந்நாட்களிலே எருசலேமிலே குறைவாயிருந்திருக்கிறார்கள் என்பதையே இது நமக்குக் காட்டுகிறது. இன்றும் அதே நிலை நீடிக்கிறது. ஜனங்கள் சத்தியத்தை நோக்காமல் அதற்கு செவிகொடாமல், தங்களுடைய இச்சைகளின்படி செய்யப்பார்க்கிறார்கள். அது சத்தியமாகாது. வேதமே சத்தியம் கர்த்தருடைய வசனமே சத்தியம் எனக் காண்கிறோம். இறுதிநாட்களிலே இந்த வசனத்தின்படியே தீர்ப்பு இருக்கும் என்று வெளிப்படுத்தல் 19:1-ல் வாசிக்கிறோம். "இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்; அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது: அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்" என்கிறது. வேதாகம சத்தியத்தின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. ஆனால்



மாற்றங்களை நாம் காண வேண்டும். மாற்றமேதுமில்லையென்றால் புதிய பிறப்புமில்லை.

2. வெளிப்படையாகப் பலர் புதிய பிறப்பென்றால் வித்தியாசமான வாழ்க்கை முறை என்று நம்புவதில்லை. ஏனென்றால் அநேகர் அப்படி வாழ்வதில்லை. கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசமேயில்லை.

3. அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறபடி நம்முடைய வாழ்வில் நிறைய மாற்றங்கள் நிகழவேண்டும். யோவான் எழுதிய முதலாம் நிருபத்தில் தேவனால் பிறந்த ஒருவர்.

- நீதியை நடப்பிப்பார் (2:29).
- பாவம் நிறைந்த வாழ்க்கை முறையை தவிர்ப்பார் (3:9-10).
- பிறரை நேசிப்பார் (4:7).
- கிறிஸ்துவின் நிலையான விசுவாசமுடையவராக இருப்பார்(5:1-5).

**நிறைவாக:**

1. இப்போது விடுகதைக்கு திரும்புவோம்.

2. எல்லாரும் சரீரப் பிரகாரமாக பிறக்கின்றனர். ஆனால் ஆவிக்குரிய பிரகாரமாயல்ல.

3. அப்படியாக அவர்களுடைய சரீர மரணத்திற்குப் பின்பு அவர்கள் இரண்டாம் மரணத்தை நரகத்தில் அனுபவிக்க வேண்டியிருக்கும். (வெளி.20:14; 21:8).

4. மற்றவர்கள் கிறிஸ்தவர்களாகும்போது மறுபடியும் பிறக்கின்றனர் அவர்கள் இரண்டாம் மரணத்தால் பாதிக்கப்படுவதில்லை.

5. நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா?

**பொது அறிவுச் சோதனை**

**1.** அதிகமான பரப்பளவு கொண்ட நாடு எது?
அ) சீனா ஆ) ரஷ்யா இ) இந்தியா

**2.** கொரில்லாபோர் முறையை ஏற்படுத்தியவர்கள் யார்?
அ) முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஆ) மராட்டிய ஆட்சியாளர்கள் இ) விஜயநகர ஆட்சியாளர்கள்

**3.** இஞ்சி எதனை குணப்படுத்த பயன்படுகிறது?
அ) செரித்தல் ஆ) தலைவலி இ) மஞ்சட்காமாலை

**4.** நாகலாந்தின் ஆட்சி மொழி எது?
அ) காசி ஆ) நாகா இ) அசாமிய மொழி


**5.** கடற்படைதினம் எந்த நாளில் அநுசரிக்கப்படுகிறது?
அ) நவம்பர்28 ஆ) நவம்பர்4 இ) நவம்பர்6

**விடைகள்:** 1. ரஷ்யா 2. மராட்டிய ஆட்சியாளர்கள் 3. செரித்தல் 4. அசாமிய மொழி 5. நவம்பர்4

பாடம் - 24

## The New Birth - புதிய பிறப்பு - *Jerry Bates*

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி




நம்மைப் புதிதாய் சிருஷ்டிப்பேன் என்று தேவன்வாக்களித்ததற்கு நாம் காண்பிக்கும் விசுவாசமே ஞானஸ்நானத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்பது.

ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது வேதாகமம் முரண்படுகிறதா? 1பேது.3:21 உண்மையில் அப்படியில்லை. நம்மை புதிய சிருஷ்டியாக்க தேவன் ஞானஸ்நானத்தின்போது கிரியை செய்கிறார்.

6. காற்றைப் போல நாம் புதிய பிறப்பை முழுவதும் புரிந்துகொள்ள இயல ாது (3:8) பூமிக்குரிய ஓர் இடத்திலிருந்து காற்று உற்பத்தியாகி வருகிறது என்று அதை நாம் கண்டுபிடிக்க முடியாது. அது எங்கிருந்து வருகிறது எங்கே போகிறது என்று நமக்குத் தெரியாது. ஆனால் நாம் காற்றால் ஏற்படும் விளைவுகளைப் பார்க்கிறோம் கேட்கிறோம்.

7. மனித ஆத்துமாவின் மீது தேவன் எப்படி செயல்படுகிறார் என்பதை நாம் பார்க்க முடியாது. இருப்பினும் அது உண்மையே. நாம் அதை முழுவதும் விளக்க வேண்டியதில்லை. ஆனால் நாம் அதை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**இது உவமை**

யோவான் 16:25-ல் இயேசுவானவர் தன் சீடர்களிடம் உவமைகளில் பேசுவதாகச் சொன்னார். ஆனால் ஒரு காலம் வரும் அப்போது இனி ஒருபோதும் உவமையில் பேசமாட்டேன் என்கிறார்.

அவருடைய சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட போது அது தெளிவாக பிரசங்கிக்கப்பட்டது.

1. இயேசுவானவர் மகாபெரிய ஊழியத்தை ஒப்புக் கொடுக்கும்போது அவர் வெளிப்படையாகப் பேசினார் (மாற்.16:16)

2. பேதுரு முதல் சுவிசேஷப் பிரசங்கத்தை செய்தபோது கேட்டவர்களை "மறுபடியும்" பிறக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களை மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று கட்டளையிட்டார்.

3. அப்படிச் செய்தபோது அவர்கள் மறுபடியும் பிறந்தார்களா? ஆம்! பின்பு பேதுரு அவர்களுக்கு எழுதும்போது அவர்கள் மறுபடியும் பிறந்தார்கள் என்று எழுதுகிறார்.

4. மறுபடியும் பிறத்தல் என்ற சொற்றொடர் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் அதாவது தண்ணீரால் கழுவப்படுதல் அடங்கிய கீழப்படிதல் மூலமாக கிறிஸ்தவராவதற்கு மற்றொரு வழியாகும். கிறிஸ்தவராவதற்கு இது மற்றொரு வழி என்று சொல்லி நாம் இதை விட்டுவிட முடியாது.

1. இந்தச் செயல் விளக்கம் தேவனுடைய பிள்ளையாகிற ஒருவருடைய வாழ்வில் ஏற்படக்கூடிய உடனடிமாற்றத்தை வலியுறுத்துகிறது. புதிய பிறப்பின்



சொல்லப்பட்டுள்ள இந்த சத்தியங்களை தள்ளிவிடுகிறவர்களுக்கு சத்தியத்தின்படியே தீர்ப்பு இருக்கும். இதற்கு ஒருவரும் தப்பிக்கொள்ளமுடியாது என்று காண்கிறோம். இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு வாசகரே, நீ சத்தியத்திற்கு செவிகொடுக்கின்றாயா? அல்லது உலகமக்கள் பிடித்துக்கொண்டிருக்கும் அசத்தியத்திற்கு செவிகொடுத்துக்கொண்டு உன்னுடைய ஜீவியத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறாயா? ஆண்டவர் இயேசுவே சத்தியமாகவும், அவருடைய வல்லமையுள்ள வசனங்கள் சத்தியம் நிறைந்தவைகளாகவும் இருக்கிறது. அவைகளை நீ ஏற்று கீழ்ப்படியும்போது சத்தியம் உன்னை விடுதலையாக்கும். நீ சமாதான வாழ்வை கண்டடைவாய்.

**பணம்.** இந்த "பணஆசை எல்லாதீமைக்கும் வேராயிருக்கிறது" என்று 1தீமோ.6:10 வசனத்தில் படிக்கிறோம். சிலர் இதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள் என காண்கிறோம். நம்முடைய வாழ்க்கையிலும் அதை நாம் அன்றாடம் காணமுடிகிறது. பணம் இருந்தால் எதையும் சம்பாதித்துவிடலாம் என்ற நம்பிக்கை 90 சதவிகித மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. அது சரியல்ல. பணத்தினால் சத்தியத்தை வாங்கிவிடமுடியாது. சத்தியம் ஒருபோதும் பாவத்திற்கு துணைபோகாது. அதில் ஒரு பொய்யையும் காணமுடியாது. பணம் எல்லாவித தீமைக்கும் காரணமாயும், வேராயும் இருக்கிறது. முதல் நூற்றாண்டு சபையில் அதாவது கிறிஸ்துவின் சபையில் அனனியா சப்பீராள் என்ற ஒரு தம்பதியினர் இருந்ததாக நாம் அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் படிக்கிறோம். இவர்கள் தாங்கள் விற்றுவந்த காணியாட்சியில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்துவிட்டு அப்போஸ்தலர்களிடத்தில் பொய் சொன்னார்கள். முதல் நூற்றாண்டு சபை சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாக இருந்தது. இந்த சபையில் இருக்கக்கூடியவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்? ஆண்டவருடைய நாமத்தில் கூடிவருகிற இவர்கள் பொய்யராயிருக்கலாமா? ஆனால் இவர்களுக்குள்ளாக பணஆசை இருந்தபடியால் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து பொய்சொன்னார்கள். இதை அறிந்த அப்போஸ்தலனாகிய பேதுரு; அவர்களை நோக்கி: "அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" என்று கேட்டான் (அப்.5:3). பொய் பிசாசினிடத்திலிருந்து வருகிறது. அவனே இருதயத்தில் இடங்கொடுத்தவுடன் பாவத்தினாலே அவர்களுடைய இருதயத்தை நிரப்பி தேவனுக்கு விரோதமாக காரியங்களில் ஈடுபட செய்கிறான். அந்தப்படியாக அனனியா சப்பீராள் என்ற தம்பதியினுடைய இருதயத்தை பொய்யினால் நிரப்பினான். பண ஆசை எவ்வளவு பெரிய தீமையை கொண்டுவந்தது என்று பார்த்தீர்களா?

அதைப்போல இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸை பிசாசு இச்சையினால் நிரப்பினான். யோவான் இதைக்குறித்து எழுதும்போது; "சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினான்" என்று எழுதுகிறார் (யோவா.13:2). அவன் பணப்பையை சுமக்கிறவனாயிருந்தான். பணஆசை அவனுக்குள் இருந்தது. இதன்வழியாக பிசாசு யூதாசுக்குள் புகுந்தான். உனக்குள்ளாக பணஆசை இருக்குமானால் அதுவே உன்னுடைய அழிவுக்கு வழியாக இருக்கும். "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள்

போதுமென்று எண்ணுங்கள், நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" (எபி.13:5). ஏனென்றால்; "பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே" என்கிறான் பிரசங்கி 5:10. ஆகையால் பணத்தை நம்பி மோசம்போகாதிருங்கள். சகலத்தையும் உண்டாக்கின தேவன் உங்களுடைய தேவைகளை அறிந்திருக்கிறார். அவர் எப்பொழுதும் நமக்கு போதுமான தேவனாயிருக்கிறார். அவர் அற்புதமானவர் அதிசயமானவர், அவர்சொல்லஆகும், அவர் கட்டளையிட நிற்கும், இஸ்ரவேலை காக்கிற தேவன் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை. அவர் உங்களுடைய அநுதினபடியை உங்களுக்கு கொடுத்து உங்களை போஷிப்பார்.

நம்முடைய தேவன் சத்தியபரராகையால்; "சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்" என்கிறார் (ஏசா.26:2). பரலோகம் பாவத்திற்கு திறக்காது. சத்தியத்தை கைக்கொண்டுவருகிற ஜனங்களுக்கு பரலோகம் திறக்கும். புத்தியில்லாத கன்னிகைகள் ஐந்துபேரைப்போல ஆண்டவரே எங்களுக்கு கதவை திறக்கவேண்டும் எங்களுக்கு கதவை திறக்கவேண்டும் என்று சத்தமிட்டாலும், உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுவேன் என்பார். ஆகையால் சத்தியத்தின்படி நடக்க ஒவ்வொருநாளும் உங்களை ஒப்புக்கொடுங்கள். சத்தியம் நிறைந்த ஜாதிகளோடு உங்களுடைய ஐக்கியம் இருக்கட்டும். சத்தியத்திற்கு விரோதமாக நடக்கும் கூட்டத்தோடு ஒத்துப்போகா திருங்கள். அப்படிப்பட்டவர்களோடு பங்காளிகளாகாதிருங்கள். "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு" என்கிறார் சாலொமோன் தமது (நீதிமொழிகளில் 23:23). நீங்கள் சத்தியத்தை வாங்கிக்கொண்டிருக்கிறீர்களா? அல்லது அதை விற்பனை செய்துகொண்டிருக்கிறீர்களா? அப்போஸ்தலர்களுக்கு கர்த்தர் கொடுத்த கட்டளையை மறவாதிருங்கள். அவர்களை அவர் அனுப்பும்போது; "இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" என்றார் (மத்.10:8). அந்தப்படியே சுவிசேஷம் உலகமெங்கும் இலவசமாக பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. தேவனுடைய சிருஷ்டிப்பில் அநேக இலவசங்கள் இருக்கிறது. அவைகளை நாம் அன்றாடம் அநுபவித்து வருகிறோம். அதற்கு எந்தவிதமான பணத்தையும் நாம் செலுத்துவதில்லை. ஏனென்றால் நம்மை சிருஷ்டித்த தேவன் நம்முடைய பிதாவாக, தகப்பனாக, அப்பாவாக இருப்பதினால் அவர் நம்மிடம் எதையும் எதிர்பார்ப்பதில்லை. அந்தப்படியே இந்த சத்தியத்தையும் இலவசமாகவே கொடுக்கிறார். பெற்று பயனடையுங்கள்.

**இயேசுவினுடைய சத்தியத்தின்படியே நடந்த புதியஏற்பாட்டு ஜனங்கள் முதல் நூற்றாண்டில் இருந்தார்களா?**

ஆம், சத்தியத்தின்படியே நடந்த காயு என்ற சகோதரனைக்குறித்து நாம் 3யோவான் 3-ம் வசனத்தில் படிக்கிறோம். அதைப்போல சத்தியத்தின்படி நேசிக்கப்பட்ட தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்கு மூப்பனாகிய யோவான் எழுதும் இரண்டாம் நிருபத்தில் யாவரும் சத்தியத்தின்படி நேசித்திருக்கிற அம்மாளைக்குறித்து படிக்கிறோம். அதைப்போல, சத்தியத்தின்படி நடக்கிற பிள்ளைகளைக் குறித்து 2யோவான் 4-ம் வசனத்திலும், 3யோவான் 4-ம் வசனத்திலும் படிக்கிறோம். இப்படிப்பட்ட ஆதாரங்கள் இருக்கும்போது நாம் ஏன் சத்தியத்தின்படி நடக்க



அநேக விவரங்கள் தெளிவாக விளக்கப்பட்டன அதே விதமாக ஒவ்வொரு விவரமும் தெளிவாக நிறைவேறியது. அவருடைய பிறப்புக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கொடுக்கப்பட்ட விளக்கம் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரே ஒருவருக்கு மட்டுமே பொருத்தமாக இருந்தது என்பது வெளியரங்கமாக இருக்கிறபடியால் கிறிஸ்துவை குறித்த நம்முடைய விசுவாசம் இந்த தீர்க்கதரிசனங்கள் மற்றும் இவற்றின் நிறைவேற்றத்தின்மேல் நிலை கொண்டிருக்கிறது. அத்தகைய ஒரு காரியம் உலக வரலாற்றில் ஒரே ஒரு முறை மாத்திரம் நிகழ்ந்திருக்கிறது. நேர்மையாய் தேடுகிற ஒருவரை சம்மதிக்கச் செய்வதற்கு இந்த உண்மைகளை குறித்த அறிவு நிச்சயம் மாபெரும் வல்லமையாக இருக்கும்.

**கேள்விகள்**

1. தேவத்துவத்திலுள்ள மூன்று நபர்களின் பெயர்களை குறிப்பிடவும்.

2. "ஆதியிலே ----------- இருந்தது, அந்த வார்த்தை ------------ ----------- அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். ------------- --------------------- ------------- உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

3. எந்த வழிமுறையின் மூலமாக பாவம் உலகத்தினுள்ளே வந்தது?

4. மனுக்குலத்தின் பாவங்களை சுமக்கும்படி யார் அளிக்கப்பட்டார்?

5. கிறிஸ்துவின் பலியினாலே சகல மனுஷரும் இரட்சிக்கப்படுவார்களா?

6. தனித்தனியே யார் இரட்சிக்கப்படுவார்கள் யார் தொலைந்து போவார்கள் என்பதை தேவன் தெரிந்தெடுத்து கொள்கிறாரா?

7. உலகத் தோற்றத்துக்கு முன்னே தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் ஒரு -------- ஒன்று சேர்க்கப்பட்டு ----------- ---------- என்று அழைக்கப்படுவார்கள்.

8. விசேஷமாக எந்த ஜனங்களின் தேசம் மூலமாக கிறிஸ்து பிறக்கும்படி ஆயத்தம் செய்யப்பட்டது?

9. எந்த மற்ற இரு தேசங்கள் மூலமாக கிறிஸ்தவம் பரவுவதற்கான வழியை தேவன் ஆயத்தம் பண்ணினார்?

10. கிறிஸ்துவை குறித்த குறிப்பான ---------- அவர் பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டதென்பது அவர் --------------- இருந்த அனுப்பப்பட்டார் என்பதற்கு நிரூபணமாக இருக்கிறது.

**ஜெபியுங்கள்**

- ▶▶ சபை ஊழியங்களுக்காக..
- ▶▶ தேசத்திற்காக...
- ▶▶ மருத்துவமனையில் உள்ள நேயாளிகளுக்காக...
- ▶▶ சிறைக்கைதிகளுக்காக...
- ▶▶ அகதிகளுக்காக...
- ▶▶ வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காக...
- ▶▶ நமது மாத இதழுக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய வாலிப சுவிசேஷகர்கள் தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

**“ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்”**

**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**

***"ஜெபத்தைக்கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்"***

***சங்கீதம் 65:2***



கீழ்ப்படிந்தோரை இரட்சிக்க வேண்டும் என்று எண்ணிய போது தம்முடைய குமாரன் பிறக்கும்படியாக ஒரு கூட்ட ஜனங்களின் தேசத்தை உருவாக்கும்படி தீர்மானம் செய்தார். தன்னை சூழ்ந்திருந்த அநேகம் "தேவர்களுக்கு" தலைகுனிய மறுத்தவனும் தேவனை தொழுது கொண்டவனுமாகிய ஆபிரகாம் என்னும் ஒரு மனுஷனை தேவன் தெரிந்து கொண்டார்- கொடுமையான விக்கிரக வணக்கம் செய்தவர்களின் மத்தியில் ஒரே தேவனை விசுவாசித்த ஒருவனாயிருந்தான்.

ஆபிரகாமின் பிள்ளைகளுக்காக தேவன் இஸ்ரவேல் தேசத்தை உருவாக்கி, அவர்கள் தங்களை சுற்றியிருந்த தேசங்களின் செல்வாக்குகளை பின் தொடரும்படியான சோதனை குறைவாயிருக்கும்படியாக அவர்களுடைய ஆளுகைக்காக நீதி மற்றும் தேச சட்டங்களை கொடுத்தார். தேவன் தாமே அவர்களுக்காக யுத்தங்களை முன்னின்று நடத்தி அவர்களை ஆசீர்வதித்து பாது காத்தார்.

**கிறிஸ்துவின் வருகையின் ஆயத்தத்துக்கான தேவனுடைய முன்பார்வை:**

ரோம சாம்ராஜ்யத்தை தேவன் ஒரு கருவியாக பயன் படுத்தினார் முன்பு எப்பொழுதுமே இல்லாத அளவில் ரோம சாம்ராஜ்யம் ஆளுகையில் இருந்த பொழுது உலகமானது சாலைகளாலும், வணிகத்தினாலும் மிகவும் நெருக்கமாக கட்டமைக்கப்பட்டிருந்தது அங்கே பல வருஷங்களாக இல்லாத அளவில் ஒரு சமாதான காலம் ஒன்று இருந்தது. மேலும் மனுஷர் ஒரு தேசத்திலிருந்து மறு தேசத்திற்கு சுதந்திரமாக பிரயாணம் செய்தார்கள். இரட்சகர் வரும் செய்தி வேகமாக பரவத்தக்கதாக இந்த நிலை ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

இன்னும் கூடுதலாக, ஒரே பாஷை திரள் கூட்டமான ஜனங்களால் பேசப்பட்டது. இந்த ரோம ராஜ்யத்தின் காலத்துக்கு முன்பு மாபெரும் கிரேக்க சாம்ராஜ்யமானது அதன் கலாச்சாரத்தையும் பாஷையையும் அறியப்பட்ட உலகம் முழுவதிலும் பரவச் செய்திருந்தது. இது சர்வ தேச கொய்னே கிரேக்க பாஷையாக இருந்தது. அது மனுஷனால் அறியப்பட்ட தெளிவான மற்றும் சுருக்கமான சர்வதேச பாஷைகளில் ஒன்றாக இருந்தது. அதன் மூலமாக கிறிஸ்துவின் செய்தி உலகத்திற்கு போதிக்கப்பட்டது. இன்னும் பிறவாதிருக்கிற சந்ததிகளுக்காகவும் எழுதப்பட்டது. பின்னும் செய்தியின் அர்த்தமானது ஒருபோதும் மாற்றத்துக்குட்பட்டதல்ல என்பதற்கு உத்திரவாதம் அளிக்கும்படியாக தேவன் கொய்னே கிரேக்க மொழியை உபயோகத்தில் இராத ஒரு பாஷையாக மாற்றினார் - அதாவது தற்கால உபயோகத்தில் இருக்கிற பாஷை எப்திலிருந்து அது ஒரு முடிவுக்கு வந்தது. இருக்கிற சகல பாஷைகளிலும் நடைபெறுகிறது போன்று படிப்படியாக வார்த்தைகளின் அர்த்தத்தில் மாற்றம் வராது என்பதை இது உறுதிப்படுத்தியது. அதன் விளைவாக இன்றைக்கு தேவனுடைய புஸ்தகத்தின் பாஷையானது, இது எழுதப்பட்ட சமயத்தில் எவ்வாறு இருந்ததோ, அதே விதமாகவே இன்றைக்கும் நமக்கு இருக்கிறது. நவீனமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள எந்த வேதாகமத்தின் மொழிபெயர்ப்புக்கான சரியான தன்மையையும், நாம் கிரேக்க மொழிக்கே மீண்டும் சென்று பரிசோதிக்க முடியும்.

**கிறிஸ்துவை குறித்த தீக்கதரிசனங்கள்:**

திட்டம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து அநேக நூற்றாண்டுகள் கடந்துவிட்டன (உலகத்திற்கான அஸ்திபாரம் போடப்படுவதற்கு முன்பே) அச்சமயத்தில் இரட்சகரின் வருகையை குறித்த நானூறுக்கும் மேற்பட்ட செய்திகள் மனுஷருக்கு அளிக்கப்பட்டன. இவைகள் அவருடைய பிறப்புக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே காலம் குறிக்கப்பட்டன. அவருடைய ஜீவியம் மற்றும் விசேஷமாக அவருடைய மரணம் ஆகியவைகளை குறித்த



தீர்மானிக்கக்கூடாது? புதிய ஏற்பாட்டு கர்த்தருடைய சபையில் சத்தியத்தின்படி நடக்கிற சகோதரர்கள் இருந்திருக்கிறார்கள் மற்றும் சகோதரிகள் இருந்திருக்கிறார்கள் மற்றும் பிள்ளைகள் இருந்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நீங்களும் நானும் அந்தப்படியாக சத்தியத்தின்படி நடந்து சத்தியத்திற்கு சாட்சிகளாகவும், தூணும் ஆதாரமுமாக இருந்து செயல்படவேண்டுமல்லவா? நீங்களும் உங்களுடைய குடும்பமும் பிள்ளைகளும், நீங்கள் கூடிவருகிற சபையும் சத்தியத்தின்படி நடக்க ஒவ்வொரு நாளும் முயற்சி எடுங்கள். உங்களுடைய முயற்சியை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக நாங்கள் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாரோடு சேர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**நடப்புச் செய்திகள்**

- **ராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து இந்தோனேஷியாவிற்கு ஏற்றுமதியாகும் வனாமி இன இறால் மீன் வளர்ப்பு பண்ணைகளில் தீவிரமடைந்துள்ளது.**
- **நதிகளை தேசியமயமாக்க அவசர சட்டம் தேவை என அமராவதி நதிநீர் பாசன பாதுகாப்பு இயக்கம் வலியுறுத்தல்.**
- **ஐரோப்பிய நாடான பிரிட்டனின் பிரதமராக தெரசாமே மீண்டும் பதவி**

**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

## பெயர்கள் உருவான விதம்

K.R.K.Ravi Asir

தெரிந்து கொள்வோம்

▶ **காபூல் (ஆப்கானிஸ்தான்) காபூல் என்ற நதிக்கரையில் 3000 ஆண்டுகளுக்கு முன்பு உருவானது இந்நகரம் கி.மு 1774-ம் ஆண்டில்தான் தலைநகரமானது. காபூல் என்ற பெர்சிய சொல்லுக்கு 'பண்டக சாலை' என்று பொருளாகும்.**

▶ **ஜெருசலேம் ( இஸ்ரவேல்) கி.மு.14-ம் நூற்றாண்டு முதலே இருந்து வரும் நகரமாகும். எபிரெய மொழியில் இதன் அர்த்தர் 'அமைதி நகரம்' என்பதாகும்.**

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். 9443558041



# வாசல்களைத் திறவுங்கள்

## Open Doors

*J.C.Choate*



**சபையின் பணி** சுவிசேஷத்தை உலகத்திற்குப் பிரசங்கிப்பதே ஆகும். நாம் சபையின் அங்கத்தினர்கள் என்றால், பிறகு அதுவே **நம்முடைய** பணியாகும். அந்தப் பணியைச் செய்யாமைக்கு அடிக்கடி நாம் மன்னிப்புகளைக் கோருகிறோம். நாம் அதிகவேலையிருக்கிறது.... அல்லது அதிக வேலையோடு தொடர்புடையவர்களாயிருக்கிறோம்..... செய்யவேண்டிய அந்த வேலையைச் செய்வதற்கு நமக்குப் பணம் தேவையாயிருக்கிறது...... மேலும் நாம் சொந்த இடத்திற்கே தேவையாயிருக்கும் போது உலகத்தின் மற்றப்பகுதிக்கு ஏன் செல்ல வேண்டும்? ஜனங்கள் ஆர்வமில்லாமலிருக்கிறார்கள் என்றும், இலக்கியம், ரேடியோ மற்றும் டி.விக்கு செலவழிப்பது பணவிரயமாகிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்படிச்செய்யும் போது சபை வளராமலிருப்பதும் கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நமக்குக் கொடுத்தபணி செய்யப்படாமலிருப்பதும் ஆச்சரியமல்ல.

சுவிசேஷம் அதிகமான ஆத்துமாக்களைச் சென்றடையும் படிக்கு நாம் என்ன செய்யவேண்டுமென சபையின் மூப்பர்களும் அங்கத்தினர்களும் தீவிரமாக யோசிக்கவேண்டியது அவசியம். ஒவ்வொருநாளும் பெருகிக் கொண்டேயிருக்கிற மக்கள் தொகையில் ஜனங்கள் உண்டு, தேவையும் பெரியதாயிருக்கிறது. இது நம்மை நோக்கி வருகின்றதென்றால் பிறகு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா? மற்றவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருப்பதைப் பார்க்க நாம் விரும்புகிறோமா? கர்த்தர் நம்மை செய்யும்படிக்குக் கேட்டுக்கொண்டதை செய்ய நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோமா?

சந்தர்ப்பத்தின் வாசல்கள் எங்கும் காணப்படுகின்றன. நாம் நம்முடைய கண்களைத் திறந்து அவைகளைக் காணவேண்டியது அவசியம். தருணங்கள் இல்லாதது போல காணப்பட்டால், நாம் தருணங்களை **உருவாக்கலாம்**. அவற்றை எவ்வாறு உருவாக்குவது? ஓரளவு **முயற்சிசெய்வதன்** மூலம். ஒரு காரியம் வாய்க்கவில்லையென்றால், இன்னொன்றிற்கு முயற்சி செய்யுங்கள். விட்டு விடாதீர்கள். நாம் தொடர்ந்து அதை நடப்பிப்போமென்றால், வாசல் நமக்கு திறக்கும், ஒரு முறை அந்த வாசல் வழியே சென்றால், மற்ற வாசல்கள் திறக்கும், சீக்கிரமாய் நாம் செய்ய வேண்டிய பணிகளை அதிகம் பெற்றவர்களாயிருப்போம், அனைத்து பலனையும் பெறும்படிக்கு உதவியை நாடுகிறவர்களாவோம்.

திட்டங்களை உருவாக்குவதிலும் இலக்குகளை நிர்ணயிப்பதிலும் நான் ஒரு பெரிய விசுவாசியாகயிருக்கிறேன். நீங்கள் செய்யாத போது, எதைச் செய்வதற்கும் நீங்கள் **எதிர்பார்க்க** மாட்டீர்கள் - மேலும் வழக்கமாக நீங்கள் எதையும் செய்ய மாட்டீர்கள்! பல வருடங்களாக இந்தியாவில் ஊழியஞ்செய்து கொண்டு வருகின்றோம், இந்திய அரசாங்கம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில்



பாவம் இல்லாதிருக்கிற சமாதானபலி ஒன்றே பாவத்தை அகற்றிவிட போதுமானதாயிருந்தது - இவ்விதமாக மனுஷனுடைய இரட்சிப்புக்கான திட்டமானது உலகத் தோற்றத்துக்கு முன்னே உண்டாயிருந்து தேவனுடைய புத்தகத்தின் எழுத்தாளர்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது.

"நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா.4:4-5).

"அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" (எபி.9:27-28).

இப்படியாக தேவன் தம்முடைய சிருஷ்டிக்காக கொண்டிருந்த அன்பு மனுஷருடைய பாவங்களை நீக்கும்படியாக தம்முடைய சொந்த குமாரனையே பயங்கரமான பலியாக ஆக்கும்படி ஏவியது. கிறிஸ்து மரித்தது எல்லா மனுஷருக்காகவும் மரித்தார். எக்காலத்தில் வாழ்ந்தவராயினும் எல்லாமனுஷருடைய ஆத்துமாவையும் மீட்கும் பொருளாக அவர் தம்முடைய இரத்தத்தை சிந்தியது போதுமானதாக இருக்கிறது. சகல ஜனங்களுடைய கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமையை கருத்தில் கொள்ளாமல் இந்த பலியின் மூலமாக சகல ஜனங்களும் இரட்சிக்கப்படுவார்களேயாகில், அது தேவனுடைய நீதிக்கு உகந்ததாக இராது.

மனுஷரில் எவர் ஒருவரும் பாவமில்லாத ஜீவியம் ஜீவிக்க முடியாது என்ற போதிலும், தேவனை அநேகர் சபித்து மறுதலித்த போதிலும், சிலர் தம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தம்மை பிரியப்படுத்தும்படி வாஞ்சிப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார் ஆகையால் யார் தேவனை பின்பற்றுவார்களோ அவர்கள் மற்ற மனுஷரிடமிருந்து தேவனால் பிரிக்கப்பட்டு ஒரு குழுவாக ஒன்று சேர்க்கப்பட்டு தேவனுடைய குடும்பம் என்று அழைக்கப்படுவார்கள் என்ற திட்டமானது உலகத் தோற்றத்துக்கு முன்னே உருவாக்கப்பட்டது. இக்குழுவிலுள்ள ஒவ்வொரு நபரும் தனித்தனியே தெரிந்து கொள்ளப்படவில்லை. (ஒவ்வொருவரும் தான் இந்த குடும்பத்தில் இருப்பாரா, இல்லையா என்பதை தனக்காக தீர்மானம் செய்து கொள்கிறார்) ஆனால் இந்த குழுவானது ஒட்டு மொத்தமாக "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார் (எபேசி.1:4).

முதற் பாவத்தின் காலத்திலிருந்து தவறு செய்வதில் ஆழமாக விழுந்து போகும்படி தொடர்ந்து கொண்டிருந்தான். மனுஷர் பூமியை நிரப்பும்படி பலுகி பெருகினார்கள், அநேகர் மனுஷனை உருவாக்கிய தேவனை மறந்தார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த தேவர்களை தங்களுடைய சொந்தக் கைகளினால் உருவாக்கி இயற்கையையும், பிரபஞ்சத்தையும் தொழுது கொள்ளத் தொடங்கினார்கள். இந்த அநேகமான தேவர்கள் மனுஷருடைய மனங்களையும், இருதயங்களையும் நிரப்பிய படியால், கொஞ்சமான பேர் ஒரே மெய்யான தேவனை குறித்து எப்படியோ நினைவு கூர்ந்தார்கள். அநேக புராணங்களும் மற்றும் தேவ நம்பிக்கையற்ற மார்க்கங்களும் இந்த யுகத்திலேதான் தொடங்கின.

**தெரிந்துகொள்ளப்பட்ட தேசம்:**

தேவன் தம்முடைய குமாரன் உலகத்திலே ஒருநாள் பிறந்து மரித்து

பெண்கள் பகுதி

## தேவனுடைய திட்டம்

God`s Plan -Betty

**பாடம் - 9**




புத்தகம் - வேதாகமம் - தேவனிடமிருந்து மாத்திரமே வந்திருக்க முடியும் என்பதை நாங்கள் வெளிப்படுத்தி இருக்கிறோம். இது அறிவிக்கிறது ஆதியிலே தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். ஆழத்தின் மேல் இருண்ட வெற்றிடம் இருந்தது, அது பூமியாக வேண்டியதாய் இருந்தது, அவர் தனிமையாய் இருக்கவில்லை அவருடனே வார்த்தை இருந்தது, அவர்மூலமாகவே சிருஷ்டிப்பு பணி நடந்தது. காலம் நிறை வேறினபோது அவரே தேவ குமாரன் என்று அழைக்கப்பட்டார்.

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது,அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவா.1:1-3).

"அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது (கொலோ.1:15-17).

ஒன்று சேர்ந்தவகையில் ஒரே தேவனானவர் மூன்று நபர்களில் இருக்கிறார் - தேவன், வார்த்தை, ஆவியானவர் - பல நூற்றாண்டுகளில் என்ன சம்பவிக்க இருக்கிறது என்பதை முன்பே கண்டு முன்திட்டமிட்டார். அந்த திட்டமானது தீர்க்கதரிசன வாக்கியங்களில் பழைய ஏற்பாடு முழுவதிலுமாக முன்னுரைக்கப்பட்டது. அதற்கான காலம் நிறைவேறின பொழுது, அது நேர்த்தியாக தெளிவுடனே. உலகம் முழுவதிலும் உள்ள வேறெந்த புத்தகத்திற்கும் இணையற்ற வகையில் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டது 9மத்.13:35).

முதல் மனுஷனும், ஸ்திரீயும் பாவம் இல்லாமல் சிருஷ்டிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு நன்மை செய்வதை அல்லது தீமை செய்வதை தேவனுக்குக் கீழ்ப்படிவதை அல்லது கீழ்ப்படியாமல் இருப்பதை தெரிந்து கொள்ளும் மனங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. சில மார்க்கங்கள் தேவன்தாமே தீமையை சிருஷ்டித்தார் என்று போதிக்கின்றன. ஆனால் அது உண்மையல்ல ஆதாமும், ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதை தெரிந்து கொண்டார்கள். அது அவர்களுடைய கீழ்ப்படியாமையின் தெரிந்து கொள்ளுதலாக இருந்தது. அதுவே பாவத்தை உலகத்தினுள்ளே கொண்டு வந்தது.

அவர்கள் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே, அவர்களுடைய தோல்விக்கான சகலத்தையும் தேவன் ஏற்படுத்தியிருந்தார். எந்த ஒரு அழிந்து போகிற மனுஷனும் தன்னுடைய சொந்தக் கீழ்ப்படியாமையினால் பாவங்களுக்காக சமரசம் செய்து கொள்ளக்கூடாது என்பதை அவர் அறிந்திருந்தார். பாவம் செய்தவர்களோடு அவர் ஐக்கியம் கொண்டிருக்க முடியாது. செய்யப்படும் பாவங்களால் ஏற்பட்ட இந்த வெற்றிடத்தை கடந்து செல்ல ஏதோ ஒரு பாலம் இல்லாமல், தேவனும் மனுஷனும் நித்தியமாக பிரிக்கப்பட்டிருப்பார்கள்.



தன்னுடைய திட்டங்களை நிர்ணயிக்கிறதை நான் கவனித்தேன். அவர்கள் அதிமுக்கியமான தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த திட்டங்களை செயல்படுத்தும்படிக்கு உதவிக்காக மற்றநாடுகளை நாடி தங்களுடைய இலக்குகளை அடைகின்றனர். ஒரு திட்டம் நிறைவேறி அந்த இலக்குகளை அடைந்த போது, அவர்கள் வளர்ச்சியோடு கூட மற்றொரு ஐந்தாண்டுத் திட்டத்தினை வெளியிடுவார்கள்.

திட்டமிடாததும் இலக்குகள் நிர்ணயிக்கப்படாததுமான ஒரு வியாபாரத்தை எனக்குக் காண்பியுங்கள் நான் உங்களுக்குத் தோல்வியை கொண்டுவருகிற ஒரு வியாபாரத்தை காண்பிக்கிறேன். இந்தியா முழுவதும் சிறிய வியாபாரங்களையும், பழக் கடைகளையும், இன்னும் இது போன்ற பலவற்றை நான் கண்டிருக்கிறேன். சொந்தமாக கடைகளை வைத்து நடத்துகின்ற அவர்கள் தாங்கள் செய்கின்ற தொழிலில் திருப்தியடைகின்றனர். ஒரு நாளைக்கு, வாரம், மாதம், மற்றும் ஆண்டிற்கானத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படிக்கு கூடுமான அளவு சம்பாதித்து, அவர்கள் மகிழ்ச்சியாயிருக்கின்றனர். ஆனால் மற்றவர்களோ அவற்றில் திருப்தியடைவதில்லை. அவர்கள் தங்களுடைய வியாபாரம் விருத்தியடைந்து கடைசியில் நகரத்தின் வேறொரு பகுதியில் ஒரு கடையை ஆரம்பித்து, தொடர்ந்து இன்னொரு கடை, இன்னொரு கடை என ஏற்படுத்துகின்றனர். அவர்கள் அந்த நகரில் அதிகமான கடைகளையோ அல்லது வியாபாரங்களையோ நடத்துபவர்களாயிருக்கின்றனர். ஆனால் அவைகள் அவர்களுக்குப் போதுமானதாயில்லை. அவர்கள் தொடர்ந்து மற்ற நகரங்களுக்கும் முடிவாக நாடு முழுவதிலுமுள்ள நகரங்களுக்கும் நகருகின்றனர். அவர்களுடைய தரிசனம் மற்ற நாடுகளுக்கும் விரிவடைந்து செல்லுவதற்கான தருணங்களை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது. நாம் எல்லோரும் துரித உணவு வியாபாரங்கள், குளிர்பானக் கம்பெனிகள், கார்கள், ஆகாயவிமானங்கள் மேலும் உலகமுழுவதிலும் காணப்படுகின்ற பெயர் பெற்ற தயாரிப்புகள் போன்றவைகள் பற்றி நன்கு அறிந்திருக்கிறோம். இப்பேர்பட்ட உலகளாவிய விற்பனை எதிர்பாராதவிதமாக நிகழவில்லை. இவைகள் அந்தந்த தலைவர்கள் கொண்டிருந்த தரிசனம், உருவாக்கின திட்டங்கள், உலகையுடைய நிர்ணயித்த இலக்குகள் போன்றவற்றால் நிகழ்ந்தது. மிகக் கடினமான உழைப்பு, உரிமையாளர் முதற்கொண்டு அவரோடு ஒத்துழைத்த சக உழைப்பாளிகளோடு வெற்றிபெற மேற்கொண்ட உழைப்பு போன்றவைகளே இந்த நிகழ்விற்கு ஆதாரம், ஆனால் அவர்களுடைய முயற்சிகள் முடிவிலே இலக்குகளை அடைவதோடுகூட முடிசூட்டப்பட்டன.

கர்த்தருடைய ஜனங்களாகிய நாம், இவ்வுலகில் மிகச்சிறப்பான உற்பத்திப்பொருளைக் கொண்டிருக்கிறோம்: அது சுவிசேஷம், இயேசு கிறிஸ்துவினுடைய நற்செய்தி, மேலும் அவர் தருகிறதான இரட்சிப்பு. நாம் சத்தியத்தை உடையவர்களாயிருக்கிறோம். இப்போதைக்கு, இந்த உற்பத்திப் பொருளின் மேல் விசுவாசம் கொண்டுள்ளவர்கள் மேலும் மற்றவர்களை இந்த இரட்சிப்பிற்குள் கொண்டுவரும்படி என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றிற்கு முதலீடு செய்ய தன்னார்வமுள்ள ஊழியர்கள் தான் நம் அனைவருடைய தேவையாயிருக்கிறது. சில லௌகீக உற்பத்திப் பொருளை

விற்பனை செய்கின்ற மனிதனைப் பற்றிய காரியம் என்ன? அவன் வாழ்வதற்குத் தேவையானவற்றை உற்பத்திசெய்ய வேண்டியவனாயிருக்கிறான். நம்மைக்குறித்தும், மனிதவர்க்கத்திற்கென்று நாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற உற்பத்திப் பொருளைக் குறித்ததுமானது பற்றிய காரியம் என்ன? நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்பினால் நாமும் கூட கட்டாயமாக உற்பத்தி செய்யவேண்டும்.

எனது சொந்த அனுபவத்தைப் பொறுத்த மட்டில் என்னுடைய குடும்பமும் நானும் பலவருடங்களுக்கு முன்பாகவே இந்தியா வர விருப்பப்பட்டோம். நாங்கள் விசா பெறும்படிக்கு பல முறை முயற்சித்தோம் ஆனால் பெற முடியவில்லை. நாங்கள் முயற்சியை கைவிட்டிருந்திருக்கலாம் ஆனால் நாங்கள் விடவில்லை. மாறாக நாங்கள் பல வருடங்களாக பாகிஸ்தான் சென்றோம், மீண்டும் இந்தியா வர முயற்சித்தோம் ஆனால் ஸ்ரீலங்கா வழியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். கடைசியாக நாங்கள் இந்தியாவிற்குள் நுழைந்தோம். தொடர்ச்சியான விசா பிரச்சனையின் காரணமாக இரண்டு வருடங்களுக்கு நாங்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியவர்களாயிருந்தோம். அந்த சமயத்தில் ஸ்ரீலங்காவில் வானொலி நிலையம் துவங்கப்பட்டது. இந்தியாவிற்கெனவும், ஆசியாவிற்கெனவும், பலமொழிகளில் வானொலி நிகழ்ச்சியை ஒலிபரப்பும்படியான சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவ விடவில்லை. மேலும், நாங்கள் இலக்கியத்தை பலமொழிகளில் (வேதாகம அஞ்சல்வழி பாடத்திட்டங்கள், மாத இதழ்கள், துண்டுப்பிரதிகள், மற்றும் புத்தகங்கள்) அச்சிட்டு பிரசுரிக்கும்படிக்கு ஒரு மாபெரும் முயற்சி மேற்கொண்டோம். இலக்கியத்தின் வாயிலாகவும், வானொலி வாயிலாகவும் நேபாளம், சிங்கப்பூர், கிழக்குமலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மியான்மர், மற்றும் ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளிலும் உலக முழுவதிலும் ஊழியம் செய்யும்படிக்கு இது வழி நடத்தியது. இன்று இந்தியாவிலேயே தொலைக்காட்சி ஒலிபரப்புகிறதான டி.வி. நிகழ்ச்சி மூலம் சுவிசேஷம் பரவுவதற்கான வாசல் திறக்கப்பட்டுள்ளது! மற்றபடி தேவன் வாசல்களைத்திறந்தார், நாங்கள் அதன் வழியாக மற்ற வாசல்களை கண்டடையும்படி சென்றோம். கர்த்தருடைய ஊழியத்தை விரிவாக்கும்படியான வாசல்கள் திறக்க காத்திருப்பீர்கள் என்றால் உங்களுக்கும் எங்களுக்கும் எவ்விதமான வாசல்கள் திறக்கப்பட்டிருக்கும் என்பதை அவர் அறிவார்.

என்னுடைய குடும்பமும் நானும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கும் கர்த்தருடைய சபையை ஸ்தாபிப்பதற்கும் பல லட்ச மக்களை கொண்ட பட்டணங்களில் நுழைந்திருக்கிறோம். நாங்கள் அங்கு சென்றபோது ஒரு ஆத்துமாவைக்கூட அறியவில்லை, ஆனால் நாங்கள் அங்கே இருந்தோம், மேலும் நாங்கள் கர்த்தர் எங்களோடிருந்தார் எனவும் அங்கு ஊழியஞ்செய்ய எங்களுக்கு அருளப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டோம். முதல் ஞாயிறு நாங்கள் எங்களுடைய ஹோட்டல் அறையிலேயே தேவனை ஆராதிக்கவேண்டியவர் களாயிருந்தோம், பின்பு ஒரு வாடகை வீட்டில் அல்லது எங்கெல்லாம் நாங்கள் சென்றோமோ அங்கெல்லாம் ஆராதனை செய்தோம். வழக்கமான அந்த ஞாயிற்று கிழமையில் எங்களோடு ஆராதனை செய்யும்படி யாரோ ஒருவரை



எனக் கருதப்படுகிறது. இதுவே நாமனைவரும் தேவசாயலில் எது ‘சரி’ எது ‘தவறு’ என்ற ஒழுக்க சிந்தையோடு கூடிய உணர்வோடு உண்டாக்கப்பட்டிருக்கிறோம் என்பதற்கான சாட்சியாகயிருக்க வில்லையா?

15. ஜனங்கள் பாவக்காரியங்களைச் செய்வது "வேடிக்கையானது" என அடிக்கடி சொல்லுகின்றனர். பாவம் நிறைந்த காரியங்கள் "வேடிக்கையானது" என்றும் அதன் முடிவ அழிவு என்றும் நினைக்கிறீர்களா?

**வகுப்புப்பயிற்சி:**

நீங்கள் டிவி அல்லது சினிமாக்களைப் பார்க்கையில் பாவக்காட்சிகள் எவை இவைகளை எல்லாம் வேதவாக்கியங்கள் கண்டிக்கிறது என்பதை அறியமுடிகிறதா? நம்முடைய கலாச்சாரத்தால் இவைகள் தவறானது எனச் சித்தரிக்கப்படுகிறதா அல்லது ஒரு மனிதனின் தனிப்பட்ட தேர்ந்தெடுத்தல்கள் என ஏற்றுக்கொள்ளப்படுகிறதா?

## இயேசு என்னோடேகூட இருக்கையில்...

*உயிருள்ள தேவகுமாரன் இயேசு என்னோடேகூட இருக்கையில்;*
*அசுத்த ஆவி என்னை மோசம் செய்யவும், தொடவும் விட்டுவிடுவாரோ?*

*ஜீவஅப்பமும், ஜீவதண்ணீருமான இயேசு என்னோடேகூட இருக்கையில்;*
*அப்பத்திற்கும், தண்ணீருக்கும் என்னை அலையவும், தவிக்கவும் விட்டுவிடுவாரோ?*

*உயிருள்ள தேவகுமாரன் இயேசு என்னோடேகூட இருக்கையில்;*
*உயிரற்ற நவகிரகங்களும் கோளும் என்னை என்ன செய்யும்?*




*சற்குரு நாதர் இயேசு என்னோடேகூட இருக்கையில்;*
*சத்துரு என்னை மேற்கொள்ளவும் நெருங்கவும் விட்டுவிடுவாரோ?*

*சத்தியபரன் இயேசு என்னோடேகூட இருக்கையில்;*
*சாத்தானை நான் எதிர்த்துப்போரிடுவேனே!*

K.S.Manikavasagam

உங்கள் நண்பர்களுக்கு
இவ்விதழை கொடுத்து
பழக்கச் சொல்லலாம்.
அவர்களும் சத்தியத்தை
அறிய ஒரு வாய்ப்பை
ஏற்படுத்திக் கொடுங்கள்.



**உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்".**

பாவம் தேவனுக்கு மாறாக தன்னை வைத்து தேவனுக்குப் பதிலாக பாவத்தை நாம் தேடினால் நாம் சந்தோஷமாக இருப்போம் என்கிறது. ஆனால் உண்மையில் பாவம் மட்டுமே துக்கத்தையும், துன்பத்தையும் கடைசியாக மரணத்தையும் கொண்டுவருகிறது.

**இதற்கு இணையான வேதவாக்கியங்களை வாசித்துப் பார்த்து விவாதியுங்கள்:**

ஏசாயா 59:1-2; 1யோவா.3:4; மத்.22:37-39; 1பேது.1:16; 1யோவா.2:15-17.

**விடையளித்து இவ்வினாக்களைக் குறித்து விவாதியுங்கள்:**

1. இப்பாடத்திற்கான மனப்பாட வசனம் எது? இவ்வசனம் எவ்வாறு பிரயோகிக்கப்படுகிறது?

2. சில நடவடிக்கைகள் மற்றவர்களை வேதனைப்படுத்துகிறவராய் இருக்கும் என்பதை நாம் அறிவோமா?

3. நம்முடைய நடவடிக்கை சிலநேரங்களில் தேவனை வேதனைப்படுத்துகிறதா?

4. ஏன் பாவம் ஒரு பிரச்சனையாயிருக்கிறது?

5. தேவன் மனுஷனை உண்டாக்கி இருக்கிறதற்கான நோக்கமென்ன?

6. பாவம் என்றால் என்ன? இது எவ்வாறு தேவனுடைய நோக்கத்திற்கு விரோதமாக செயல்படுகிறது?

7. பாவத்தின் விளைவுகள் யாவை?

8. மனுஷன் தேவசாயலில் உருவாக்கப்பட்டிருப்பதற்கான அர்த்தம் என்ன?

9.நாம் தேவனைக் கண்டுபிடிக்க வேண்டுமென அவர் விரும்புகிறாரா?

10. நாம் தேவனைக் கண்டுபிடிப்பதிலிருந்து நம்மைத் தடைசெய்கிறது எது?

11. இச்சை எவ்வடிவத்திலும் - பணம், பொருட்கள், அதிகாரம் அல்லது உணர்வுப்பூர்வமான இச்சை..."மோசமானது" அல்லது தனிப்பட்ட தேர்ந்தெடுத்தலின்படி நம்முடைய கலாச்சாரத்தைப் பார்த்து செய்தல் மேலும் அடையவேண்டுமென்ற அளவுக்கதிமான ஆசைகள் வருகின்றனவா?

12. ஒருவேளை நீங்கள் சில பொருட்களை வாங்கிவிட்டு, அதன்பின் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ரசீதில் ரூபாய் 140/-க்கான பொருளின் விலை சேர்க்கப்படவில்லை என்ற உண்மையினை அறிகிறீர்கள். அந்த தவறினை சரிசெய்து கொள்ளும்படி திரும்பவும் கடை கணக்கரிடம் செல்ல விரும்புவீர்களா?

13. ரோமர் 13:8 "ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், ------------ ---------------- ------------------ பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" நாம் சிறிய விஷயங்களைக் குறித்து அசட்டை செய்வோமானால், இதுவுங்கூட தேவனுக்குக் கீழ்ப்படியாமையாயிருக்கிறதல்லவா?

14. உலக முழுவதும் வரலாற்றிலும், அதிகமான கலாச்சாரங்களிலும் பொய் சொல்லுதல் ஏமாற்றுதல், களவு செய்தல் இதுபோன்ற பல செயல்கள் தவறு



கண்டுபிடித்துக்கொண்டோம், அதை நாங்கள் தொடர்ச்சியாகக் செய்கையில், நாங்கள் அநேகம் அநேகம் பேர்களை எங்களோடு வேத ஆராய்ச்சி செய்யும்படி கண்டுபிடித்தோம்! சீக்கிரமாய் அங்கே மனந்திரும்புதல்கள் நடைபெற்றது. நான் மதசம்பந்தப்பட்ட புத்தக சாலைகளையும், வேதாகம சங்கங்களையும், சமயக் கூட்டங்களையும் கூட (ஒருமித்துப்போக அல்ல, தொடர்பு ஏற்படுத்தி நாங்கள் இருக்குமிடத்தினை ஜனங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு), சந்தித்தேன், கைப்பிரதிகளையும் அழைப்பு அட்டைகளையும் அச்சிட்டு கடைகளில் இருப்பவர்களுக்கும், சந்தையிலும் அல்லது யாரையெல்லாம் நாங்கள் சந்திக்கிறோமோ அவர்களையும் எங்களுடைய கூட்டங்களிலும் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய கலந்து கொள்ளும்படி அழைத்தோம். நான் நம்முடைய அஞ்சல் வழி பாடத்திட்டத்தினை செய்தித்தாளில் விளம்பரப்படுத்தினேன். மேலும் எங்கெல்லாம் வாய்ப்புண்டோ, அங்கு நான் விரைந்து உபதேசித்து உள்ளூர் செய்தித்தாட்களிலும் விளம்பரப்படுத்தினேன். இதன் விளைவாக ஜனங்களோடு அறிமுகமானோம், கூட்டங்களுக்கு அவர்களை அழைத்தோம், அவர்களுடைய வீடுகளில் வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தினோம், அவர்களில் அதிகமானோர் மனந்திரும்பினார்கள், கற்பிக்கவும் போதிக்கவும் சிலருக்கு கற்றுக்கொடுத்து பயிற்சியளித்தோம், இன்றோ வானொலி நிகழ்ச்சியிலும், இந்திய தொலைக்காட்சி நிலையங்களிலும் மேலும் ஆசியாவின் மற்ற நாடுகளிலும் சுவிசேஷத்தை அறிவிக்கிற மூப்பர்களையும் பிரசங்கியார்களையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். இது நாங்கள் செய்ததை நொடிப்பொழுதில் வெளிப்படுத்துகிறது. யாரெல்லாம் திறந்த வாசல்கள் வழியாகச் செல்ல ஆயத்தமாயிருக்கிறார்களோ அவர்களோடு கூட எங்களால் தொடந்து பணியாற்ற இயலுகிறது. நம்மில் எங்களுடைய பூரண இலக்குகளை அடையாதபோதிலும், செய்யவேண்டிய காரியங்கள் அதிகமிருக்கிறபடியால், நாம் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய காரியத்தை பரப்பவிரும்புகிறபோது, அதைச் செய்ய அவர் நம்மை ஆசீர்வதிப்பார் என எங்களால் உறுதியாக அறிவுறுத்த முடிந்தது.

கிறிஸ்து, "....நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"(மாற்16:15,16) என்றார். மறுபடியும், அவர், "....இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"(யோவா.4:35) என்றார். இன்னொரு சமயம் அவர், ".....அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (லூக்.10:2) என்றார்.

இயேசு, "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத்.7:7,8)

எனவும் துரிதப்படுத்தினார். இந்தக்காரியங்கள் நிறைவேறும்படிக்கு, ஒரு தனிமனிதன் இதற்கான முயற்சியினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென, இது குறித்ததான வாக்குத்தத்தங்களை தயவுகூர்ந்து கவனியுங்கள். ஆனால், தேனாலே எல்லாம் கூடும் (19:29) என்பதை நினைவுகூருங்கள், மேலும் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோம.8:31). மறுபடியும் கிறிஸ்து நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால், நம்முடைய தேவைகள் எல்லாம் கொடுக்கப்படும் (மத்.6:33) என்றார், மேலும் கர்த்தர் உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நம்மோடு இருப்பேன் எனவும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பவுல் தன்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய தனக்குப் பெலனுண்டு என அறிவித்தான் (பிலி.4:13).

என்னுடைய சகோதரரே, இதைப்பற்றி சற்று சிந்தியுங்கள். நாம் உலகைப் பார்க்க தரிசனத்தோடு கூட நம்முடைய கண்களை ஏறெடுக்கும்போது, நாம் இசைந்த உதவிக்காரர்களாக மாறுவோம்: தேவன் நம்மை பெலப்படுத்துகிறவர், கிறிஸ்து நம்மை வழிநடத்துகிறவர், சுவிசேஷம் (இரட்சிப்பிற்கென்று தேவவல்லமை யுடையது) பிரசங்கிக்கப்பட வேண்டியது, மேலும் நாம் கர்த்தருடைய பிள்ளைகளை நமக்கு உதவிசெய்யும்படிக்கும், ஊக்கப்படுத்தும் படிக்கும் பெற்றுள்ளோம். இதுமாத்திரமல்ல, ஆனால் மனந்திருந்திய ஒவ்வொருவனும் இன்னொரு வேலையாளாகவும், சுவிசேஷம் பரம்பி மகிமைப்படுவதற்கு அதிகமான பண உதவியைக் கொண்டுவருகிற வனாகவும் மாறவேண்டும். நாம் இதைச் செய்ய ஆயத்தமாயிருக்கும்போது எந்த நேரத்திலும் உலகத்திற்கு கிறிஸ்துவை எடுத்துச் செல்ல முடியும். நாம் எழுந்து வாசல்களைத் தட்ட ஆரம்பித்து நமக்கென்று திறக்கப்பட்ட வாசல்களுக்குள் உட்பிரவேசிப்பது அவசியம். வாசல்களும் அதற்கு மேலாக வாசல்களும் கர்த்தருக்கென்றும் அவருடைய பணிக்கென்றும் பெரிய காரியங்களைச் செய்ய வழிநடத்தும் என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து “இதோ அடியேன், கர்த்தாவே, என்னை அனுப்பும்” எனக் கூறுவோமாக.

**"சொல்லும் அடியேன் கேட்கிறேன்"**

**– 1சாமுவேல் 3:20**






**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact: 94435 58041*




## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்
## Evangelizing Our Friends
*-TVOTI*



**பாடம் - 2**
**-தொடர்ச்சி**

**நாம் இதை எவ்வாறு பிரயோகிக்கிறோம்?**

தேவன் தம்மைத் தேடும்படிக்கு மனிதனை தமது சொந்த சாயலில் சிருஷ்டித்தார். நாம் ஆதியாகமம் 1:27-ல் **"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்"** எனப் படித்தோம். இந்த வசனம் ஒவ்வொரு மனுஷனும் தங்களுக்குள்ளே தேவனுடைய சாயலைக் கொண்டிருக்கிறான் எனவும் அவர்கள் நன்மை தீமை சரியானவை மற்றும் தவறானவை போன்றவைகளுக்கிடையே உள்ள வேறுபாட்டினை அறிந்து கொள்கிறார்கள் எனவும் பொருள்படுகிறது. மேலும், ஒவ்வொரு மனுஷனும் முழுவதும் தேவனுக்கு முக்கியமானவர்களும் பாவத்திலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்களாயிருப்பதற்குத் தகுதிவாய்ந்தவர்களாயும் இருக்கிறார்கள் (தீத்.2:14).

இயேசு, **"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என்றார். இந்த முழு உலகமும் மனிதனுடைய ஆத்துமாவிற்கு ஈடாகாது என்பது இயேசுவின் குறிப்பாக இருக்கிறது. இவ்வுலகத்தைவிட நமது ஆத்துமா மிகவும் மேன்மையுள்ளதாயிருக்கிறது, எனவே தேவன் நம்மை மீண்டும் நம்மை தம்மண்டை இழுத்துக்கொள்ள விரும்புகிறார்.**

மேலும், ஏனென்றால் நாமனைவரும் தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டிருக்கிறபடியால், நாம் அவரைத் தேடவும் அவரைக் கண்டுகொள்ளவும் முடியும். பவுல், **"...அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே" (அப்.17:21) என்றார்.**

ஏன் மனுஷர் தேவனைக் கண்டுபிடிக்கக் கூடாது? பிரச்சனை என்னவென்றால் அநேகர் தங்களுடைய மாம்ச விருப்பங்களால் தாங்கள் உருவாக்கப்பட்ட நோக்கத்திலிருந்து விலகிச் செல்கின்றனர் - எல்லாவற்றிற்கும் மேலாக தேவனிடத்தில் அன்புகூரவும் பிறனிடத்தில் அன்புகூரவும் அப்படியாக தேவனை மகிமைப்படுத்த வேண்டியவர்களாக இருக்க வேண்டும். இதை யோவான் 1யோவான் 2:15-17-ல் அவன் சொல்லும்போது; **"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில் மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள்**